# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சியில் 05.01.2023 ஆம் தேதி வியாழன் கிழமை காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் : 1**

**நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

1) வரும் தைத்திருநாள் பொங்கல் விழாவினை தமிழ்நாடு மக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ. 1000/- ரொக்கம் வழங்குவதற்கு உத்தரவு பிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கீழக்கரை பொதுமக்கள் சார்பாகவும், நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றி தெரிவித்தல்.

2) கீழக்கரை நகர்மக்களின் எதிர்கால குடிநீர் தேவையை நிறைவு செய்யும் வகையில் நகர் பகுதியில் செயல்படுத்தப்பட உள்ள Jal Jeevan Mission திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சிக்கு **New Multi Village Scheme** திட்டத்தில் கீழக்கரை நகராட்சியையும் சேர்த்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்திட்டம் தயாரிக்கவும், பரிந்துரை செய்து தற்போது மேற்காணும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளும் பொருட்டு அதற்குண்டான நிதி ரூ.211.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்த மதிப்பிற்குரிய இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களுக்கு கீழக்கரை பொதுமக்கள் சார்பாகவும், நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றி தெரிவித்தல்.

**தீர்மானம் எண். 188**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

__பொருள் : 2__

**கீழக்கரை நகர்மன்ற 9வது வார்டு உறுப்பினர் திரு.மு. நசீருதீன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண் | விவரம் |
|---|---|
| 1. | 9வது வார்டு வடக்குத் தெருவில் இம்பாலா உசைன் அவர்களின் வீடு அமைந்துள்ள பகுதியிலிருந்து சேகப்பா பள்ளிவாசல் எதிரே உள்ள பாதை வரை புதிய வடிகால் குழாய் (8" குழாய்) மற்றும் இண்டர்லாக் சாலை அமைத்து தருமாறு பகுதி மக்களின் சார்பில் கோருதல். |

__தீர்மானம் எண். 189__

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

__பொருள் :3__

இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ஆம் நிதியாண்டின் கீழ், கீழக்கரை பழைய காவல் நிலையம் எதிர்புறம் உள்ள வள்ளல் சீதக்காதி சாலையில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிக்கு இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், இப்பணிகளை செயல்படுத்தும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் செயலாணைகள் ந.க.ஆர்4/1749/2022, நாள். 27.07.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 07.09.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், திரு.பி.எம். கஜேந்திரன், கீழக்கரை என்பவருக்கு 12.09.2022 தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நகராட்சி பொறியாளர்கள் குறிப்பின்படி மேற்படி இடத்தில் நெடுஞ்சாலை துறை மூலம் சாலை விரிவுபடுத்தும் பணி மேற்கொள்ள இருப்பதால், மேற்படி இடத்தில் நிழற்குடை அமைக்க சாத்தியக் கூறு இல்லை எனவும், எனவே, மேற்காணும் பணிக்கு மாற்று இடமாக அதே வள்ளல் சீதக்காதி சாலை பழைய பேருந்து நிலையம், பெட்ரோல் பங்க் அருகில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணி மேற்கொள்ள இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.152/2022/இ1)**

__அலுவலகக்குறிப்பு__

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வள்ளல் சீதக்காதி சாலை பழைய காவல் நிலையம் எதிர்புறம் பணி மேற்கொள்ள இயலாததால் அதே வள்ளல் சீதக்காதி சாலை பழைய பேருந்து நிலையம், பெட்ரோல் பங்க் அருகில் பயணிகள் நிழற்குடை அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ஆம் நிதியாண்டின் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையம், பெட்ரோல் பங்க் அருகில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.190</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட கிழக்குத் தெரு பகுதியில் (ஆட்டோ ஸ்டாண்ட்) இருந்து கஸ்டம்ஸ் சாலை வரை ஏற்கெனவே பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய் அமைத்து தொட்டிகள் **(Manhole)** மற்றும் அதன் மூடிகள் அமைக்கும் பணி ரூ.8,50,000/- மதிப்பீட்டில் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.42, நாள். 31.05.2022-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் பணிக்கு 22.06.2022-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர். உத்தண்டி என்பவரால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது இந்நகர்மன்ற தீர்மான எண். 73, நாள். 30.06.2022-ன்படி அங்கீகரிக்கப்பட்டு, 01.07.2022-ந் தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்காணும் பணியினை ஒப்பந்ததாரர் ஆரம்பிக்காமல் காலதாமதப்படுத்தியதால் மற்றும் ஒப்பந்ததாரர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரால் பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. மேலும், மேற்படி இடம் பொதுசுகாதார கேடு ஏற்படும் வகையில் உள்ளதால் பொதுமக்களின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்காணும் பணிக்கு திரு. ஆர். உத்தண்டி என்பவருக்கு 01.07.2022 -ந் தேதி வழங்கப்பட்ட பணி உத்தரவு மற்றும் பணி ஒப்பந்தம் ரத்து செய்து அப்பகுதி மக்களின் பொதுசுகாதார நலன் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள இந்நகர்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.197/2022/.இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி மக்கள் பொதுசுகாதார நலன் கருதி மேற்காணும் பணிக்கு ஒப்பந்ததாரர் திரு. ஆர். உத்தண்டி என்பவருக்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 30.11.2022-ந் தேதி ரத்து செய்து உத்தரவிடப்பட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.191</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொருள் : 5

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு பயன்பாட்டில் உள்ள HCL MONITOR Model No. HCMEEWB11 கணினி CPU acer பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் இவ்வலுவலக அன்றாட மின்னஞ்சல் பதிவிறக்கம் வருவாய் பிரிவு மற்றும் திட்டப்பணிகள் தொடர்பான பணிகளில் தொய்வு ஏற்படுவதால் மேற்படி கணினிகள் மற்றும் CPU பழுது நீக்கம் செய்து தருமாறு வருவாய் பிரிவு எழுத்தரால் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி கணினிகள் மற்றும் CPU இந்நகராட்சி பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு உரிய விலைப்புள்ளி கோரி உரிய நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, நிர்வாக நலன் கருதி கீழ்காணும் விவரப்படியான கணினி மற்றும் CPU பழுதுநீக்கம் செய்ய உரிய விலைப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ள இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொருட்கள் விபரம் | வேலையின் விவரம் |
|---|---|---|
| 1. | HCL MONITOR Model No. HCMEEWB11 | பழுது நீக்கம் செய்து தருதல் |
| 2. | CPU acer | |

(கோப்பு எண். 274/2022/இ1)

அலுவலக குறிப்பு

1) கணினி மற்றும் CPU பழுது நீக்கம் செய்வதற்கு உரிய விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 192

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 6**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் உள்ள வடிகால்களில் ஏற்பட்டுள்ள உடைப்பு மற்றும் பழுதுகளை சரி செய்தல் மற்றும் வடிகால்களை RCC Cover slab அமைத்து சரி செய்தல் பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 176, நாள். 30.11.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 13.12.2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி - 2022-23** | | | | |
| 1 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் உள்ள வடிகால்களில் ஏற்பட்டுள்ள உடைப்பு மற்றும் பழுதுகளை சரி செய்தல் மற்றும் வடிகால்களை RCC Cover slab அமைத்து சரி செய்தல் பணிகள் | 8.50 | திரு. சி. பழனி ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.16 % குறைவு |
| | | | திரு. பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.06 % அதிகம் |

**(கோப்பு எண்654/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. பழனி, ஒப்பந்ததாரர், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்..

**தீர்மானம் எண். 193**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 7**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 05 முத்துச்சாமிபுரம் முதல் புதிய பேருந்து நிலையம் வரை, வார்டு எண்.09 வடக்குத் தெரு மாஸ்டர் பேக்கரி அருகில் கழிவுநீர் பைப்லைன் அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 155, நாள். 13.10.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 13.12.2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி - 2022-23** | | | | |
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 05 முத்துச்சாமிபுரம் முதல் புதிய பேருந்து நிலையம் வரை, வார்டு எண்.07 முகைதீனியா பள்ளி அருகில் மற்றும் வார்டு எண்.09 வடக்குத் தெரு மாஸ்டர் பேக்கரி அருகில் கழிவுநீர் பைப்லைன் அமைக்கும் பணி | 6.00 | திரு. பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.03 % குறைவு |
| | | | திரு. பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 2.92 % அதிகம் |

**(கோப்பு எண்468/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.எம். கஜேந்திரன், ஒப்பந்ததாரர், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்..

**தீர்மானம் எண். 194**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 8**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9 வடக்குத் தெரு (மாஸ்டர் பேக்கரி சந்து), வார்டு 12 சின்னகடை ரோடு, வார்டு 18 ஓடக்கரை பள்ளி ரோடு, வார்டு 4 புதிய பேருந்து நிலைய பகுதி ஆகிய சாலைகளில் குடிநீர் குழாய் உடைப்பு மற்றும் அடைப்பு சரி செய்யப்பட்ட பகுதியில் சிமெண்ட் சாலை குண்டும் குழியுமாக உள்ளது. மேற்கண்ட பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் மூலம் சரி செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 175, நாள். 30.11.2022-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 13.12.2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2022-23** | | | | |
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 வடக்குத்தெரு, மாஸ்டர் பேக்கரி, வார்டு எண்.18 ஓடக்கரை பள்ளி, வார்டு எண்.14 புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் (கழிவுநீர் குழாய் உடைப்பு மற்றும் அடைப்பு சரி செய்யப்பட்ட பகுதிகளில்) சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணி. | 4.50 | திரு. பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.01% குறைவு |
| | | | திரு. சி. பழனி ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.07% அதிகம் |

**(கோப்பு எண்653/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.எம். கஜேந்திரன், ஒப்பந்ததாரர், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்..

**தீர்மானம் எண். 195**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 9**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரையுள்ள தெருக்களில் பதிக்கப்பட்டுள்ள கழிவுநீர் பைப்லைன் மற்றும் தொட்டி கவர் ஸ்லாப் மூடி பழுதுபார்க்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 173, நாள். 30.11.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 13.12.2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி - 2022-23** | | | | |
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டு பகுதிகளில் கழிவுநீர் பி.வி.சி. பைப்லைன் மற்றும் தொட்டி கவர் சிலாப் பழுது பார்க்கும் பணி | 7.50 | திரு. பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.12 % குறைவு |
| | | | திரு. பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 1.47 % அதிகம் |

**(கோப்பு எண்651/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.சிவக்குமார் ஒப்பந்ததாரர், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்..

**தீர்மானம் எண். 196**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

## பொருள் : 10

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரையுள்ள தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களில் உடைப்பு மற்றும் அடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்யவும், கேட் வால்வு, Sluice Valve, Starter பொருத்தி குடிநீர் வழங்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 174, நாள். 30.11.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 13.12.2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி - 2022-23** | | | | |
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரையுள்ள தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களில் உடைப்பு மற்றும் அடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்யவும், கேட் வால்வு, Sluice Valve, Starter பொருத்தி குடிநீர் வழங்கும் பணிக்கு | 3.20 | திரு. பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.19 % குறைவு |
| | | | திரு. பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 2.04 % அதிகம் |

**(கோப்பு எண்652/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.எம். கஜேந்திரன், ஒப்பந்ததாரர், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 197**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 11**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 பெத்திரி தெருவில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 4" பி.வி.சி. பைப்லைன் அகற்றிவிட்டு புதிதாக 8" பி.வி.சி. பைப்லைன் அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 177, நாள். 30.11.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 13.12.2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி - 2022-23** | | | | |
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 பெத்திரி தெருவில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 4" பி.வி.சி. பைப்லைன் அகற்றிவிட்டு புதிதாக 8" பி.வி.சி. பைப்லைன் அமைக்கும் பணி | 5.00 | திரு. சி. பழனி ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.29 % குறைவு |
| | | | திரு. பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.13 % அதிகம் |

**(கோப்பு எண்655/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. பழனி, ஒப்பந்ததாரர், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்..

**தீர்மானம் எண். 198**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 12</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5 அண்ணாநகர், முத்துச்சாமிபுரம் வார்டு எண்.11 எஸ்.என். தெரு மற்றும் வார்டு எண்.18 சேரான் தெரு ஆகிய இடங்களில் குப்பைகள் அடிக்கடி கொட்டப்படும் பகுதிகளில் பாதுகாப்பு வேலி (Chain link fencing) அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 178, நாள். 30.11.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 13.12.2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி - 2022-23 | | | | |
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5 அண்ணாநகர், முத்துச்சாமிபுரம் வார்டு எண்.11 எஸ்.என். தெரு மற்றும் வார்டு எண்.18 சேரான் தெரு ஆகிய இடங்களில் குப்பைகள் அடிக்கடி கொட்டப்படும் பகுதிகளில் பாதுகாப்பு வேலி (Chain link fencing) அமைக்கும் பணி | 2.20 | திரு. பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.17 % குறைவு |
| | | | திரு. பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 3.88 % அதிகம் |

**(கோப்பு எண்656/2022/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.எம். கஜேந்திரன், ஒப்பந்ததாரர், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்..

**<u>தீர்மானம் எண். 199</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 13**

கிழக்குத் தெரு பகுதியில் (ஆட்டோ ஸ்டாண்ட்) இருந்து கஸ்டம்ஸ் சாலை வரை ஏற்கெனவே பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய் அமைத்து தொட்டிகள் **(Manhole)** மற்றும் அதன் மூடிகள் அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.42, நாள். 31.05.2022-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கு 13.12.2022-ந்தேதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | **குடிநீர் மற்றும் வடிகால் நிதி - 2022-23** | | |
| 1 | கிழக்குத் தெரு பகுதியில் (ஆட்டோ ஸ்டாண்ட்) இருந்து கஸ்டம்ஸ் சாலை வரை ஏற்கெனவே பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய் அமைத்து தொட்டிகள் **(Manhole)** மற்றும் அதன் மூடிகள் அமைக்கும் பணி | 8.50 | திரு. பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.26 % குறைவு |
| | | | திரு. சி. பழனி ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 3.75 % அதிகம் |

**(கோப்பு எண்.197/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.எம்.கஜேந்திரன், ஒப்பந்ததாரர், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 200**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 14**

இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ஆம் நிதியாண்டின் கீழ், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 5-வது வார்டு முத்துச்சாமிபுரம் பகுதியில் சமுதாயக் கூடம் அமைத்தல் பணிகள் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணிக்கு, இராமநாதபுரம் தொகுதி சட்டமன்|ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் செயலாணை ந.க.ஆர். 4/1749/2022, நாள்.27.07.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும், ஏற்கெனவே உள்ள சமுதாயக் கூடத்தினை இடித்து அப்புறப்படுத்தி பணி செய்ய செயலாணையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதைதொடர்ந்து, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்களால் கட்டிடம் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு, அவ்வலுவலக கடிதம் ந.க.எண். பொ. ப.து. கட்டிடம் (க&ப) கோட்டம், இராமநாதபுரம் ந.க.எண்.273/எம்.வப.இவஅ-1/கோ.21/2022, நாள். 13.10.2022ன்படி கட்டிடம் உறுதிதன்மையற்றது என சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்ற தீர்மானம் எண். 133., நாள். 13.10.2022-ன்படி மேற்படி கட்டிடத்தினை இடித்துஅப்புறப்படுத்த அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சிப் பொறியாளர்களால் கட்டிடத்தில் பொருட்கள் ஏலம் விடுவதற்கான மதிப்பீடு ரூ.19,773/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் பொருட்கள் ஏலம் விடுவதற்கு 01.12.2022-ந் தேதி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி, கீழ்காணும் விவரப்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 09.12..2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலக்கேள்வி மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**ஏலக்கேள்வி**

| வ.எண் | பெயர் / முகவரி | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1. | திரு. ஏ.கே. மரைக்காயர்,<br>18/72, நடுத்தெரு,<br>கீழக்கரை | 20600/- |
| 2. | திரு.என்.பி.கே. கென்னடி,<br>6/182, வாணியர் தெரு,<br>கீழக்கரை. | 21000/- |

**ஒப்பந்தப்புள்ளி**

| வ.எண் | பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ளவில்லை. | |

**(கோப்பு எண்.152/2021/அ2)**

**அலுவலக குறிப்பு**

1) மேற்காணும் விபரப்படியான உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை கோரியுள்ள திரு.என்.பி.கே. கென்னடி, கீழக்கரை என்பவரின் ஏலக்கேள்வியை இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி கட்டிடத்தின் பழைய பொருட்களை ஏலம் கோரிய நபரே மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 201**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 15**

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு பயன்பாட்டில் உள்ள HCL MONITOR Model No. HCMEEWB11 கணினி CPU acer பழுதுகள் ஏற்பட்டு பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளதால், இந்நகர்மன்ற தலைவரிடம் 05.12.2022 ந் தேதி முன் அனுமதி பெறப்பட்டு, கணினி மற்றும் பிரிண்டர் பழுது நீக்கம் செய்வதற்கு 09.12.2022ந் தேதி குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பொருட்கள் விபரம் | எண்ணம் | நிறுவனத்தின் பெயர்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஸ்மாக்டெக் கம்ப்யூட்டர்ஸ் இராமநாதபுரம், | எஸ்.கே. கம்ப்யூட்டர்ஸ், சேல்ஸ் அன்ட் சர்வீஸ், இராமநாதபுரம் | ஏசியன் இன்போடெக் சேல்ஸ் அன்ட் சர்வீஸ், இராமநாதபுரம் |
| 1 | System SSD Hard Disk | 2 | 10400 | 10600 | 11000 |
| 2 | System Service | 1 | 1200 | 1400 | 1500 |
| 3 | Antivirus Total security | 1 | 1100 | 1400 | 1550 |
| | **Total** | | **12700** | **13400** | **14050** |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி, இராமநாதபுரம் ஸ்மாக்டெக் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனம் மூலம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளதை நிர்வாக நலன் கருதி இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை இந்நகர்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 274/2022/இ1)

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கணினி மற்றும் பிரிண்டர் பழுது நீக்கம் செய்வதற்கு குறைந்த விலைப்புள்ளி ரூ.12700/- கொடுத்துள்ள இராமநாதபுரம் ஸ்மாக்டெக் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 202**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 16**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான 9 IUDP கடைகள் தற்போது பழுதடைந்து இடியும் சூழ்நிலையில் உள்ளதால், மேற்படி கடைகளை இடிப்பதற்கு கட்டிடத்தின் உறுதிதன்மை குறித்து 18.09.2020-ந்தேதி காரைக்குடி அழகப்பா செட்டியார் பொறியியல் கல்லூரி மூலம் மேற்படி கட்டிடம் அபாயகரமானதாக உள்ளது மற்றும் உறுதிதன்மை அற்றது என சான்று வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி கடைகளின் குத்தகைதாரர்களுக்கு கட்டிடத்தை காலி செய்து தருமாறு இந்நகராட்சி மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து குத்தகைதாரர்களால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இராமநாதபுரம் வழக்கு எண்கள் முறையே அ.வ. எண். 35/2020, 36/2020, 37/2020, 38/2020, 39/2020, 40/2020 என வழக்கு தொடரப்பட்டது. தற்போது வழக்குகள் குத்தகைதாரர்களால் வாபஸ் பெறப்பட்டு, வழக்கு முடிவுற்ற நிலையில் மேற்படி கட்டிடத்தினை குத்தகைதாரர்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் காலி செய்யப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 13.12.2022-ந் தேதிய காணொலி ஆய்வு கூட்ட அறிவுரையின்படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் காணொலி ஆய்வு கூட்ட அறிவுரையின்படியும், வரி மற்றும் வரியற்ற இனங்களில் நீக்கம் செய்யப்பட வேண்டியவை மற்றும் பயன்பாட்டில் இல்லாத கட்டிடங்களின் கேட்புகளை உடனடியாக நீக்கம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி கீழ்காணும் விவரப்படியான IUDP கடைகளின் கேட்புகளில் இருந்து இந்நகராட்சி கணினி கேட்பு பதிவேட்டில் நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | IUDP Shop உரிமையாளர் பெயர் | வரி விதிப்பு எண் | நீக்கம் செய்யப்பட வேண்டிய கேட்பு | ₹ தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. சங்கரன் | 133/1053 | 07/2021 முதல் 03/2023 வரை | 54782 |
| 2 | திரு. வி. காமராஜ் | 133/1054 | 09/2022 முதல் 03/2023 வரை | 16284 |
| 3 | திரு. நாராயண மூர்த்தி | 133/1055 | 09/2022 முதல் 03/2023 வரை | 18998 |
| 4 | திரு. தவசி | 133/1056 | 02/2022 முதல் 03/2023 வரை | 37996 |
| 5 | திருமதி. விஜயராணி | 133/1057 | 02/2020 முதல் 03/2023 வரை | 102424 |
| 6 | திரு. கே.டி. பாஸ்கரன் | 133/1058 | 06/2022 முதல் 03/2023 வரை | 27140 |
| 7 | திரு. தினகரன் | 133/1059 | 08/2022 முதல் 03/2023 வரை | 21712 |
| 8 | திரு. காசிநாதன் | 133/1060 | 10/2022 முதல் 03/2023 வரை | 16284 |
| 9 | திரு. வேலுநாடார் | 133/1061 | 09/2022 முதல் 03/2023 வரை | 18998 |
| | **மொத்தம்** | | | **314618** |

**(கோப்பு எண்.132/2016/எச்1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சிக்கு சொந்தமான 9 IUDP கடைகளுக்கான கேட்பு தொகை ரூ. 314618/- இந்நராட்சி கணினி பதிவேட்டில் (Allotment cancellation) மூலம் நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 203</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 17</u>**

கீழக்கரை நகராட்சியின் 2021-2022 ஆம் ஆண்டுக்குரிய இயல்நிலை கணக்குகள் வரவு செலவினங்கள் (Receipt & Expenditure), ஐந்தொகை கணக்குகள் (Trail Balance), இருப்பு நிலை விவரம் (Balance Sheet) ஆகியவைகள் புதிய ஏழு இலக்க முறையில் தயார் செய்து தணிக்கைக்கு அளிக்கும் பொருட்டு நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் (ABA) அமைப்புக்கான ஆலோசகர் (Consultant for Municipal & Town Panchayat ABA System) கோவில்பட்டி திரு.வி. சீனிவாசன், எம்.காம்.சி.ஏ., என்பவருக்கு கட்டணம் ரூ.35000/- மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.146/2022/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ.35000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 204</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 18</u>**

இந்நகர்மன்ற தீர்மான எண்.139, நாள். 13.10.2022-ல் அனுமதிக்கப்பட்டதன்படி, 25.11.2022 அன்று Compactor வாகன எண்.TN65AE 7663 வாகனத்தில் பழுது நீக்கப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளி பெட்டி மூலம் வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Mani motors,<br>Thermal Four Road,<br>Mettur Dam,Mettur. | ரூ.400000/- |

| | | |
|---|---|---|
| 2 | Sri Ganapathi motor works<br>Aravinth Nagar<br>Gopichettipalayam<br>Erode | ரூ.420000/- |

மேற்காணும் இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 205**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 19**

இந்நகர்மன்ற தீர்மான எண்.90, நாள். 12.08.2022-ல் அனுமதிக்கப்பட்டதன்படி, மீண்டும் மஞ்சப்பை பயன்படுத்துவதை முன்னெடுப்பது குறித்து விழிப்புணர்வு வாசகங்களுடன் அச்சடிக்கப்பட்ட "மஞ்சப்பைகள்" வாங்குவதற்கு 25.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | CSRK Traders<br>Trichirapalli | ஒன்றின் விலை ரூ19/- |
| 2 | Actythem Traders<br>Pudukottai | ஒன்றின் விலை ரூ16/- |

மேற்காணும் இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள Actythem Traders நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 206**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 20**

இந்நகர்மன்ற தீர்மான எண்.143, நாள். 13.10.2022-ல் அனுமதிக்கப்பட்டதன்படி, 4 எண்ணம் TATA ACE வாகனங்களில் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 25.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | A.S. Auto Mobiles,<br>Madurai - Rameswaram Road<br>Paramakudi | ரூ.423450/- |
| 2 | Bismi Motors<br>Maraikkayar pattinam<br>Paramakudi | ரூ.344380/- |

மேற்காணும் இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள Bismi Motors நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 207**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 21**

கீழக்கரை நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 148, நாள். 13.10.2022-ன்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய உரக்கிடங்கு சர்வே எண். 419/2 அமைந்த இடத்தில் நகர்நல மையம் கட்டுவதற்கு 7 சென்ட் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தற்போது வரப்பெற்ற துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், இராமநாதபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1579/அ3/2019, நாள். 02.12.2022-ல் மேற்படி நகர்நல மையம் கட்டுவதற்கு கூடுதலாக 9 சென்ட் இடத்தினை ஒதுக்கீடு செய்துதருமாறு கோரியதன்படி, ஒதுக்கீடு செய்துள்ள 7 சென்ட் இடத்துடன் கூடுதலாக 9 சென்ட் இடம் சேர்த்து மொத்தம் 16 சென்ட் இடத்தினை ஒதுக்கீடு செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

இந்நகர் பொதுமக்களின் நலன் கருதி நகர்நல மையம் கட்டவதற்கு 16 சென்ட் இடம் ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 208**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 22**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்அவர்களின் கடிதம் ந.க.எண்.எ2/ 44311/ 2022, நாள். 25.11.2022 கடிதத்தில் கேட்டுள்ளதற்கிணங்க, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2007-ம் ஆண்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வருவாய் துறையிடம் ஒப்படைப்பு செய்யும் பணியில் ஈடுபட்ட பணியாளர்களின் உணவு, ஸ்நாக்ஸ் மற்றும் தேநீர் ஏற்பாடு செய்ததற்குண்டான செலவினம் ரூ. 9570/- "பீமாஸ்" உணவகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

நகர்மன்ற தலைவரின் முன்னனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 209**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 23**

கீழக்கரை நகராட்சி பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகர் பகுதிகளில் வாறுகால்கள் மற்றும் உரக்கிடங்கு பகுதியினை சுத்தம் செய்யும் பணிக்கு விலைப்புள்ளிகள் கோரவும் அதற்கான செலவினம் ரூ.50000/-க்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்னனுமதி பெற்று விலைப்பள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 210**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 24**

இராமநாதபுரம் மவாட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி, கீழக்கரை நகர் பகுதிகளில் அரசுக்கு சொந்தமான இடங்களில் 25000 மரக்கன்றுகள் உருவாக்க நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, 25000 விதைகள் வாங்குவதற்கும், பாலித்தீன் பைகள் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினத்திற்கும் ரூ.3.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 211**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 25**

மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் தொலைபேசி செய்தியில் தெரிவித்துள்ளபடி, மாவட்ட தணிக்கை குழுக்கான ஆய்வு கூட்டம் நடைபெறவுள்ளதில் கூட்டத்தை முழுவதுமாக வீடியோ எடுப்பதற்கான செலவின தொகை ரூ.10,000/- வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 212**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 26**

இந்நகராட்சி நகர்மன்ற 01.11.2022-ந்தேதிய முன் அனுமதியின்படி, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 5HP மோட்டார் இரண்டு எண்ணம் வாங்குவதற்கு விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற மூன்று எண்ணம் விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | SS.S.Selvam<br>Contractor,<br>Trinelveli | ரூ. 9,1804/- |
| 2 | Siva Bala Guru<br>Construction<br>Trinelveli | ரூ. 90,388/- |
| 3 | S.Lingesh kanna<br>Contractor<br>Thatchanallur | ரூ. 91,568/- |

மேற்காணும் மூன்று எண்ணம் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள Siva Bala Guru, Construction நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 213**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 27**

இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.184, நாள். 30.11.2022-ல் அனுமதிக்கப்பட்டதன்படி, பொது சுகாதார பணிகளுக்கான கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு 20.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி பெட்டி மூலம் வரப்பெற்ற மூன்று எண்ணம் ஒப்பந்தப்பள்ளிகள் கீழ்கண்டவாறு நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | Vallabha Minerals,<br>17, Techno Valley,<br>Natham Road<br>Dindugul - 624002 | ரூ. 9,75,000/- |
| 2 | Sri Shenbaga vinayagar Enterprises<br>Pampatti Road,<br>Virudhunagar - 626106 | ரூ. 9,80,000/- |
| 3 | Max safety<br>16/8 Karugapet Village,<br>Puduchery - 605009 | ரூ. 9,99,900/- |

மேற்காணும் மூன்று எண்ணம் விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 214**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

பொருள் : 28

கீழக்கரை நகராட்சி நகர்மன்றத்தின் 02.12.2022 ந் தேதிய முன் அனுமதியின் படி, JCB வாடகை விபரம் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளி விவரங்கள் நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | திரு. P.M.. கஜேந்திரன், (Contractor) 21/33 தட்டாந்தோப்பு, கீழக்கரை. | ஒரு மணி நேரத்திற்கு ரூ. 950/- ஓட்டுநர் படி ரூ.500/- |
| 2 | JP Auto works and Transport services 3/24 கிழக்குத்தெரு, பேராவூர் , இராம்நாடு | ஒரு மணி நேரத்திற்கு ரூ. 1050/- ஓட்டுநர் படி ரூ.1000/- |
| 3 | RST Auto Garriage, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம். | ஒரு மணி நேரத்திற்கு ரூ. 1150/- ஓட்டுநர் படி ரூ.650/- |

மேற்காணும் மூன்று எண்ணம் விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மற்றும் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 215

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

பொருள் : 29

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முதன்மை செயலாளர் மற்றும் அரசு நிதி துறை கூடுதல் செயலாளர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் , சொத்துவரி விதிப்புகளுடன் ரேஷன் கார்டு எண் (Ration Card Number), பான் கார்டு எண் (PAN Card Number), சரக்கு மற்றும் சேவை வரி எண் (GST Number) இணைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையிலான சொத்துவரி விதிப்புகளுடன் ஆதார் எண், ரேஷன் கார்டு எண், பான் கார்டு எண், சரக்கு மற்றும் சேவை வரி எண் ஆகியவைகளை UTIS மென்பொருளில் உள்ளீடு (Update) செய்ய வழிவகை

செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் (ந.க.எண்.24371/2011/ஐடி, நாள். 17.11.2022) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.310/2020/அ1)

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 21 வரையிலான சொத்துவரி விதிப்புகளுடன் ஆதார் எண், ரேஷன் கார்டு எண், பான் கார்டு எண், சரக்கு மற்றும் சேவை வரி எண் ஆகியவைகளை வரிவிதிப்புதாரர்களிடம் விவரங்கள் பெற்று UTIS மென்பொருளில் உள்ளீடு (Update) செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 216</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 30</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6 கிழக்குத் தெரு 11 வது குறுக்குத்தெரு மற்றும் வார்டு எண். 16 சாலைத்தெரு ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே அமைந்துள்ள கழிவுநீர் குழாய் ஆங்காங்கே சேதமடைந்து Manhole மற்றும் Cover slab உடைந்து கழிவுநீர் சாலையில் வெளியேறி, பொதுசுகாதார கேடு ஏற்படும் வகையில் உள்ளது. எனவே, மேற்படி சேதமைடைந்த குழாய்களை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக குழாய் பதித்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிக்கு ரூ2.65 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.843/2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u> :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி மக்களின் பொதுசுகாதார நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ.2.65 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 217</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 31**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரை அமைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டு சாலைகளில் கழிவுநீர் ஓடி பொதுசுகாதார கேடு ஏற்பட்ட வருகிறது. மேலும் மேற்கண்ட வார்டு பகுதிகளில் அமைந்துள்ள Manhole Cover slab வாகனங்கள் சென்று அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டு வருகிறது. எனவே, மேற்படி பராமரிப்பு பணிகள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் உடனுக்குடன் சரி செய்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ9.65 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 844 /2022/இ1)

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ.9.65 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 218**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 32**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 07 வடக்குத்தெரு (மாரியம்மன் கோவில் அருகில்) பகுதியில் அமைந்துள்ள பொது கிணற்றை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் தூர்வாரி, ஆழப்படுத்தி சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைத்து பொதுமக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் வகையில் மேற்கூரை அமைத்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.4.15 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 845 /2022/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ 4.15 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 219</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 33</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்1 முதல் 21 வரையுள்ள தெருக்களில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலை உயர்த்தி கட்டவும், அதன் மீது கவர் ஸ்லாப் பொருத்தும் பணிக்கு ரூ.9.60 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 846 /2022/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ9.60 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 220</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 34</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2 தட்டான்தோப்பு முதல் தெரு மழைநீர் வடிகால் சாலையிலிருந்து தாழ்வாக உள்ளதால் அதனை இருபுறமும் உயர்த்தி Cover slab அமைத்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.5.70 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால்

நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 847 /2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>** :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ.5.70 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 221</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 35</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20 மீனவர் குப்பம் (21 குச்சு) பகுதியில் அமைந்துள்ள பொதுக்கிணறு பெண்கள் குளிப்பதற்கு பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி கிணற்றை சுற்றி அமைந்துள்ள சுவர் சேதமடைந்தும் மேற்கூரை இல்லாமல் உள்ளது. இதனால் பெண்களுக்கு பாதுகாப்பற்ற நிலை உள்ளது. எனவே, மேற்படி கிணற்றை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மேற்கூரை அமைத்திடவும் மற்றும் ஆண்கள் பயன்படுத்தும் பகுதியில் பொதுக்கிணற்றை உயர்த்தி கட்டி சுற்றிலும் கழிவுநீர் தேங்காத வகையில் Paver block பதித்து கழிவுநீர் ஓடை அமைத்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.3.30 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 848 /2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>** :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ.3.30 லட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 222</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 36**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 08 தெற்குத் தெரு (இஸ்லாமியா பள்ளி அருகில்) வில் கழிவுநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு தெருவில் கழிவுநீர் தேங்கி பொதுசுகாதார கேடு ஏற்பட்டு வருகிறது. எனவே, மேற்படி பழுதடைந்த குழாய்களை அகற்றி புதிதாக 8" PVC குழாய் பதித்து Manhole அமைத்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.2.15 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 849 /2022/இ1)

**அலுவலக குறிப்பு** :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி மக்களின் பொதுசுகாதார நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ.2.15 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண். 223**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 37**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 03 ஆடறுத்தான் தெரு, மற்றும் ஸ்டேட் பேங்க் சந்து (வள்ளல் சீதக்காதி சாலை) பகுதிகளில் ஏற்கெனவே அமைந்துள்ள கழிவுநீர் குழாய் பழுதடைந்து ஆங்காங்கு உடைப்பு ஏற்பட்டுள்ளதால், கழிவுநீர் வெளியேறி சாலைகளில் தேங்கி பொதுசுகாதார கேடு ஏற்பட்டு வருகிறது. எனவே, மேற்படி பகுதியில் பழைய, சேதமடைந்த குழாய்கள் மற்றும் Man hole களை அகற்றி விட்டு புதிதாக கழிவுநீர் குழாய் அமைத்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.3.75 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 850 /2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி மக்களின் பொதுசுகாதார நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ. 3.75 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 224</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 38</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11, தச்சர் தெரு 1-வது மெயின்ரோடு (S.M. லேத் அருகில்) மற்றும் தச்சர் தெரு 2 வது மெயின்ரோடு பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் ஓடை ஆங்காங்கு சேதமடைந்தும் மற்றம் Covering slab சேதமடைந்தும் உள்ளது. இதனால் மேற்படி பகுதியில் கழிவுநீர் தேங்கியுள்ளதால் பொதுமக்கள் ஓடையை கடந்து செல்ல இயலாமல் உள்ளது. எனவே, மேற்படி ஓடையை உயர்த்தி கட்டி RCC Cover Slab அமைத்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.6.35 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 851/2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி மக்களின் பொது சுகாதார நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ. 6.35 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 225</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 39</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15, கடற்கரை சாலையில் இரண்டு இடங்களில் Pipe Culvert அமைந்துள்ளது. மேற்படி Pipe Culvert முற்றிலும் சேதமடைந்து சாலை ஓரங்களில் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மேற்படி சாலையில் வாகனங்கள் செல்ல இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படிசாலையில் இரண்டு RCC Culvert புதிதாக அமைத்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.4.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 852 /2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>** :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ. 4.00 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 226</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 40</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 09, வடக்குத்தெரு (தைக்கா), வார்டு எண். 12 நடுத்தெரு மற்றும் வார்டு எண். 13 தெற்குத் தெரு பகுதியில் பதிக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய் (Sewage pipe line) சேதமடைந்துள்ளன. அதற்கு புதிதாக 8" PVC குழாய் பதித்து Manhole அமைத்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.3.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 853 /2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி மக்களின் பொதுசுகாதார நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ. 3.50 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 227</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**<u>பொருள் : 41</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20, பெத்திரி தெருவில் அமைந்துள்ள பழைய சமுதாய கழிப்பிடம் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி கழிப்பிட வசதி இல்லாமல் அப்பகுதி பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாவதால், மேற்படி பகுதியில் ஏற்கெனவே அமைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தை பராமரிப்பு பணிகள் செய்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.2.45 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 854 /2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அப்பகுதி மக்களின் பொதுசுகாதார நலன் கருதி மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ. 2.45 லட்சம் மட்டும் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 228</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 42**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் 11.12.2022-ம் தேதிய கீழக்கரை நகராட்சிக்கு திட்டப்பணிகள் குறித்து நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேம்படுத்தும் விதமாக, வாகனங்கள் கொள்முதல் செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, கீழக்கரை நகராட்சிக்கு 15-வது மத்திய நிதிக்குழு மான்யம் (Tied Grant -2022-23) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில், திடக்கழிவு மேலாண்மை பணிக்கு புதிதாக வாகனங்கள் கொள்முதல் செய்ய உரிய நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு ரூ. 49.00 லட்சம் மதிப்பீட்டிற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு வழிமுறையாக அனுப்பி வைக்கப்பட்டதை தொடர்ந்து, சென்னைநகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 18274/2022/CFC–1, நாள். 23.12.2022 ன்படி கீழ்காணும் விவரப்படியான பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வாகனங்களின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | Supply and delivery of Light Commercial tipper vehicle (2 cum capacity with one year O&M by supplier) | 7.30 |
| 2 | Supply and delivery of excavator cum front end loader with bucket capacity 0.26 cum and operating weight of 7650 with compliance to IS 20474-4 for earth moving machinery | 36.00 |
| 3 | Supply and delivery of 22 No's of Tri Cycle for Solid Waste Management | 5.50 |
| | **மொத்தம்** | **48.80** |

மேற்காணும் விவரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், ரூ.48.80 லட்சத்திற்கு வாகனங்கள் கொள்முதல் செய்ய மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 751/2022/இ1)

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 15-வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் 2022-23 ஆம் ஆண்டு (Tied Grant -2022-23)ஒதுக்கீடுகளுக்கு ரூ.48.80 லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை இந்நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 229**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**பொருள் : 43**

தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0- திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தும் பொருட்டு, கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் புதிய உரக்கிடங்கு பகுதியில் Construction of Material Recovery Facilities (MRF) அமைக்கும் பணி GOI Rs.13.00 Lakhs, State Share Rs.8.00 lakhs, ULB share Rs.5.00 lakhs செய்வதற்கு ரூ.26.00 லட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை நக.எண். 22083/2022/SBM2 நாள்.13.12.2022ன்படி கருத்துரு அனுமதிக்கப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 -ன் கீழ் பணிகள் தேர்வு செய்யப்பட்டு விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதை தொடர்ந்து, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண். 122083/2022/SBM-2, நாள். **23.12.2022** ன்படி கீழ்காணும் விவரப்படியான பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | Construction of Material Recovery Facilities (MRF) at Pallamorekulam New Compost yard in Keelakarai | 26.00 |

மேற்காணும் விவரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், ரூ.26.00 லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 815/2022/இ1)

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 -ன் கீழ் ரூ.26.00 லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை இந்நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 230**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**நகர்மன்ற தலைவர்**

**கீழக்கரை நகராட்சி**